# தமிழ் இலக்கியங்களில் மனித உரிமைகள்

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் நிதியுதவியுடன்

**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறை**

மற்றும்

**முனைவர் மா. ஆறுச்சாமி ஆராய்ச்சி நிறுவனம்**

இணைந்து நடத்தும்

## இரண்டு நாள் தேசியக் கருத்தரங்கம்

தொகுதி – I

**UGC sponsored two day National Seminar on**

**HUMAN RIGHTS IN TAMIL LITERATURE**



பதிப்பாசிரியர்

**முனைவர் க. முருகேசன்**

51. **முனைவர் ஆ. மகாலட்சுமி** 237
புறநானூற்றில் அரசாட்சியும் மக்கள் உரிமைகளும்

52. **மகாலக்குமி** 242
திருக்குறள் காட்டும் மனித உரிமைச் சிந்தனைகள்

53. **எண்ணம் மங்கலம் பழநிசாமி** 246
நல்வழிபாட்டுச் சிந்தனை மனித குலத்தின் மகத்தான உரிமை!

54. **முனைவர் க. மங்கையர்க்கரசி** 251
தமிழ் இலக்கியங்களில் மனித உரிமைகள்

55. **வ. மணிகண்டன்** 255
குறுந்தொகை காட்டும் மனித உரிமைகள்

56. **அர. மரகதவள்ளி** 260
அடிமைமுறையும் மனித உரிமை மறுதளிப்பும்

57. **முனைவர் ச. மாசிலா தேவி** 265
சங்க இலக்கியத்தில் மனித உரிமைச் சிந்தனைகள்

58. **சு. மீனாட்சிசுந்தரம்** 270
புறநானூற்றில் மனித உரிமைச் சிந்தனைகள்

59. **த. மேரி** 275
மூட்டம் நாவல் காட்டும் மனித உரிமை மீறல்கள்

60. **முனைவர் ப.சு. மூவேந்தன்** 279
சங்கப் புலவர்களின் மனித உரிமைச் சிந்தனைகள்

61. **க. முரளிதரன்** 284
கம்பராமாயணத்தில் காணப்படும் மனித உரிமைகள்

62. **ஆ. முருகானந்தம்** 289
திரிகடுகத்தில் மனித உரிமைகள்

63. **வி. மைதிலி** 292
புதிய தலைமுறை இதழில் மனித உரிமைகள்

64. **அ. நாகமுருகன்** 297
பூமணியின் ஐந்து நாவல்கள் - 'பிறகு' நாவலில் மனித உரிமைகள்

65. **முனைவர் மு. நாகராஜன்** 302
அறநூல்களில் கல்லாதவரின் இயல்பும் மனிதஉரிமைப் பதிவுகளும்

66. **தி.க. நாகராஜன்** 307
புனித சிவப்பிரகாசரின் மனித உரிமைச் சிந்தனைகள்

67. **முனைவர் வெ.அ. நாகரத்தினம்** 312
புறநானூறு காட்டும் மனித உரிமைகள்

# 65. அறநூல்களில் கல்லாதவரின் இயல்பும் மனித உரிமைப் பதிவுகளும்

**முனைவர் மு. நாகராஜன்**
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோவை - 641 029.*

## கல்லாதவரின் இயல்பும் இழிவும்

கற்றல் ஒருவரிடம் நல்ல குணநலன்களை உருவாக்கிப் பண்படச் செய்து உயர்வடையச் செய்கிறது. கல்லாமை ஒருவருடைய பிறவியில் ஏற்படும் இழிகுணங்களைப் போக்காது; பண்படையச் செய்யாது; அவரைக் களர்நிலம் போலப் பயனற்றவராக, நற்பண்புகள் அற்றவராக, சமுதாயத்தால் வெறுத்து ஒதுக்கப்படும் தன்மைகள் கொண்டவராக இருக்கச் செய்கிறது. தேவையற்ற சில இழிகுணங்கள் அவரிடம் காணப்படும்.

மேலும் கல்லாதவர்கள் தன்னைத்தானே உயர்வாகப் பேசிக்கொள்வர். மற்றவர்கள்மீது பழியும் தூற்றுவார்கள். பிறருடைய மறைபொருளை வெளியிட்டு அலர் தூற்றுவார்கள். அத்தகு கல்லாதவரின் தொடர்பினால் அனைவருக்கும் துன்பமே உண்டாகும். "**அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை**" எனும் நறுந்தொகைப் பாடல் (46) கல்லாதார் தீத்தொழிலைச் செய்ய அஞ்சவோ, நாணவோ மாட்டார்கள் என்பதை உணர்த்துகிறது. கல்லார் தமக்கு வரும் பழியைக் கண்டு அஞ்சமாட்டார்கள். இதனை நன்னெறி

***"அறிவுடையாரன்றி அதுபெறார் தம்பால்***
***செறிபழியை அஞ்சார் சிறிதும்"***
***(கதிர்முருகு, நீதிக்களஞ்சியம், ப.60, பா.34)***

எனத் தம் பாடலில் உணர்த்துகிறது.

கல்லாதவருக்கு நாள்தோறும் உதவி செய்தாலும் அதனைப் பெரிதாகக் கருதமாட்டார்கள். நன்றி பாராட்டும் இயல்பும் அற்று இருப்பர்.

***"............ பனையனைத்து***
***என்றும் செயினும்***
***நன்றில நன்றறியார் மாட்டு"***

என்ற நாலடியார் (பாடல்.344) கல்லாதவரின் பண்பில்லா இயல்பினை உணர்த்துகிறது.

மனிதன் பிறர் தன்னைப் பாராட்ட வேண்டும் என்பதற்காக தன்னைத்தானே பெருமைப்படுத்திக் கொள்கிறான். குறிப்பாக